
# திருமறை ஆசான்

**புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்**

மலர் - 10 ஆகஸ்ட் 1997 இதழ் - 8



வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு
அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. சங்கீதம் 19:1

வெளியிடுவோர் :
**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30-11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00-12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30-6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15-8.30 | வேத ஆய்வு வகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00-9.00 | ஜெப ஆராதனை |

## ஆசானின் அறிவுரையிலே

பக்கம்


1. சீகார் ஊராரைப் போலாகுங்கள் 1
2. தேவன் பேரில் விசுவாசம் 10
3. பெண்கள் பகுதி 16
4. இயேசுவின் இரத்தம் 21
5. பிரசங்கியார் பகுதி 25
6. வெற்றி 27
7. வேதாகமத் திருமுழுக்கு 32

# THIRUMARAI AASAAN

**Editor**
**S. RAJANAYAGAM**

**Honorary Editor**
**J.C. CHOATE**

**Published by Church of Christ**
**Dharapuram Road, KANGAYAM - 638 701 Tamilnadu, India.**
**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 10** **AUGUST - 1997** **Issue -8**


## ஆசிரியவுரை

# "சீகார்" ஊராரைப் போலாகுங்கள்

கடந்த சில வருடங்களாக ஆகஸ்ட் அல்லது செப்டம்பர் மாதங்களில், வேதாகமத்தின் பக்கங்களில் ஒளிந்து கொண்டிருக்கும் மாமனிதர்களை வெளியே கொண்டு வந்து, உங்களுக்கு அறிமுகம் செய்து வைத்தேன். அவர்களிடமிருந்து பல பாடங்களை, நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கைக்காக நாம் ஒவ்வொருவரும் கற்றுக் கொண்டோம். அவர்கள், சம்மா, பர்திமேயு, ஒநேசிப்போரு என்று பெயருடையவர்கள் நம்மால், சாதாரணமானவர்கள் என்று கருதப்படும் இப்படிப்பட்ட வர்களின் பட்டியலில் இடம் பெற்று, மங்கிக் கிடக்கும் நானும் ஒளிவீசிட வேண்டுமென்று இன்னும் அநேகர் துடித்துக் கொண்டுள்ளனர். ஆனால், அந்தத் தனித்தவர்களின் பட்டியலுக்குத் தற்காலிகமாக விடைகொடுத்துவிட்டு, இவ்வருடம் ஒரு ஊராரையே உங்கள் முன் கொண்டு வந்து நிறுத்த விரும்புகிறேன். அதற்குக் காரணம், அந்தத் தனிப்பட்டவர்களின் வாழ்க்கையிலிருந்து பாடம் கற்றுக்கொள்ள நாம் தவறியிருந்தால் கூட, இந்த ஊராரின் ஒட்டுமொத்த குரலுக்காகிலும் செவிமடுப்போமென்ற ஒரு எதிர்பார்ப்புதான்.

உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்று சீஷர்களுக்குக் கட்டளையிட்ட நமதாண்டவர், 'சுற்றுத் திரியும்' பணியை சீடர்களுக்குத் தான்முதலில் செய்து காட்டினார், ஆம் ஓரிடத்தில் இருந்து கொண்டு, தன்னை எல்லோரும் நாடிவரட்டும் என்று அமர்ந்திராமல், பெலஸ்தீனா தேசமெங்கும் சுற்றி நடந்து இராஜ்ஜியத்தின்

செய்தியைப் பிரசங்கித்தார். அந்நாட்களில் அவரின் பாதம் படும் பாக்கியம் பெற்ற பட்டணங்களும், ஊர்களும் ஏராளம். எருசலேம், கப்பர்நகூம், பெத்சாயிதா, பெத்தானியா போன்றவை அவைகளில் குறிப்பிடத்தக்கவை.

ஆனால், மேற்சொன்ன பட்டணங்களோ அல்லது கிராமங்களோ செய்யாத ஒரு வரலாற்றுச் சாதனையை சத்தமில்லாமல் நிகழ்த்தியிருக்கிறார்கள் ஒரு ஊரார். வேதத்தைப் படிக்கும் நாமும், அந்தச் சாதனையாளர்களை சாமர்த்தியமாகப் புறக்கணித்துவிட்டோம். இத்தனைக்கும், அப்படி ஒரு சிறப்பை எய்துவதற்கு அவர்களுக்கிருந்த அநுகூலச் சூழல்கள் மிக மிகக் குறைவு. சமுதாய ரீதியாகத் தாழ்ந்தவர்களாகவும், மார்க்க ரீதியாகத் தடம்புரண்டவர்களாகவும் அவர்கள் இருந்தார்கள்.

ஆம், இயேசுவின் நாட்களில், இவ்வூரார் யூதர்களால் கேவலமாக நடத்தப்பட்டார்கள். அவர்கள் பார்வையில் இந்த ஊர் இருந்த நாடாகிய சமாரியா ஒரு சாபத்தின் பூமி. அம்மண்ணை மிதிப்பதே பாவம் என எண்ணப்பட்டது. அதற்குக் காரணங்கள் பல உண்டு. அதை ஆராய இங்கு நமக்கு நேரமில்லை.

மார்க்க ரீதியாக சமாரியர்களின் நிலை இன்னும் மோசம். இவர்கள் மோசேயின் பிரமாணத்தை முற்றிலும் மறந்தவர்கள். எருசலேமுக்கு வந்து தொழாதவர்கள், யூதமத குருமார்களின் போதனையைக் கேட்கும் வாய்ப்பைப் பெறாதவர்கள். மத ஆசாரங்களை கடைபிடிக்காதவர்கள். அதைவிட மேலாக யெகோவா வணக்கத்தையும், விக்கிரக வணக்கத்தையும் இரண்டறக் கலந்தவர்கள் என்று இவர்கள் பற்றி வேதாகமம் கூறுகிறது. (2 ராஜா 17 : 41).

இருப்பினும், இவ்வூரார் தங்கள் செயலால் நமக்கு ஆசானாக இருக்கும் வாய்ப்பைப் பெற்றுவிட்டனர். வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள மிகச் சிறந்த ஊரார்களுள் இவர்கள் முதலானவர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. ஏனெனில் இயேசுவின் ஊழிய நாட்களில், அவரை வெகு துல்லியமாக அடையாளம் கண்டு, மிகப் பகிரங்கமாக ஏற்றுக்கொண்ட ஒரு ஊரார் இருந்ததாக எங்குமே காணோம் இவர்களைத் தவிர. அவர்கள் தான், இம்மாத தலைப்பை அலங்கரிக்கும் **"சீகார் ஊரார்"**.

இவர்களிடமிருந்து நாம், பாடம் கற்றுக்கொள்ளும் முன்பாக, இவர்களின் பின்னணி பற்றி கொஞ்சம் தெரிந்து கொள்வோம். யோவான் நான்காம் அதிகாரம் முதல் நாற்பத்திரண்டு வசனங்களைப் படித்துவிட்டு இக்கட்டுரையைப் படித்தால் அதிக பயனாய் இருக்கும்.

ஒரு சமயம், இயேசுவானவர் ஊழியத்தில் ஏற்பட்ட எதிர்ப்பின் காரணமாக யூதேயாவை விட்டு கலிலேயா, செல்ல முடிவெடுக்கிறார். நான்

ஏற்கனவே சொன்னதைப்போல், யூதர்கள் யூதேயாவிலிருந்து கலிலேயா செல்வதாக இருப்பின், சமாரியாவின் வழியாகப் போவதை முடிந்தவரை தவிர்ப்பர். ஆனால் இயேசுவோ சமாரியாவின் வழியாக சீஷர்களை அழைத்துக் கொண்டு செல்கிறார். (4 : 1–4).

அப்பிரயாணத்தின் போது தான் சமாரியாவிலுள்ள "சீகார்" என்னும் ஊருக்கு வந்தார். (4 : 5) கிட்டத்தட்ட ஆறு மணி நேரம் நடந்து வந்து களைப்புக்கு ஓய்வெடுக்கும்படி, பகலின் உச்சி வேளையில், புகழ் பெற்ற யாக்கோபின் கிணற்றினருகே உட்கார்ந்தார். (வ : 6) சீஷர்கள் ஆகாரம் கொள்ள ஊருக்குள் சென்றிருந்தபடியால், தனித்திருந்த இயேசு கிணற்றுக்கு தண்ணீர் மொண்டுகொள்ள வந்த சமாரியா ஸ்திரீயிடம் ஒரு உரையாடலை நடத்தினார். அந்த உரையாடலின் சாராம்சம் இப்பொழுது நமக்கு அவசியமில்லையாதலால், ஒன்றிரண்டு காரியங்களை மட்டும் குறிப்பிட்டு மேலே செல்கிறேன்.

இயேசுவுடனான அச்சந்திப்பு, ஒழுக்கரீதியாகத் தாழ்ந்திருந்த அவளுக்கு அவள் யார் என்று அடையாளம் காட்டியது. தன்னுடைய அந்தரங்க காரியங்கள் அம்பலமானதில் அவளுக்குப் பெரும் அதிர்ச்சி. நிலைகுலைந்துபோன அவள் சுதாரித்துக் கொண்டு, இனி உண்மையை ஒத்துக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற தீர்மானத்தோடு, "பதில் இல்லை" என்ற பதிலைக் கொடுக்கிறாள். (4 : 18). ஆனால், அத்தோடு நிற்காமல், தன்னை தனக்கு அடையாளம் காட்டிய, இவர், சாதாரணமானவர் அல்ல என்பதைப் புரிந்து கொண்டு, அவருடன் புத்திசாலித்தனமாகப் பேசி, அவர் யார் என்பதை சரியாகத் தெரிந்து கொண்டாள். (வ. 17–26)

தன் நிலையை நிச்சயப்படுத்திக் கொண்ட பின், உடனடியாக ஊருக்குள் போய், ஜனங்களை நோக்கி, **"நான் செய்த எல்லாவற்றையும், ஒரு மனுஷன் எனக்குச் சொன்னார், அவரை வந்து பாருங்கள், அவர் கிறிஸ்து தானோ என்றாள். அப்பொழுது, அவர்கள் ஊரிலிருந்து புறப்பட்டு அவரிடத்தில் வந்தார்கள்"** (வ 29, 30) **தொடர்ந்து வாசித்தால், 42ம் வசனம் இப்படியாகச் சொல்கிறது. "(ஊரார்) அந்த ஸ்திரீயை நோக்கி, உன் சொல்லினிமித்தம் அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலக ரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம் என்றார்கள்".**

சரி, இப்பொழுது, இந்த "சீகார்" ஊரார் தரும் பாடங்களைக் கவனிப்போம்.

## 1. அந்த ஸ்திரீயின் பேச்சுக்கு சீகார் ஊரார் செவி கொடுத்தனர் :

பொதுவாகவே, ஒரு காரியத்தை மற்றவர்கள் செய்யச் சொல்லும்போது, சொல்கிறவர்களுக்கு ஒரு தகுதி வேண்டும் என்ற நிலை சமுதாயத்தில் காணப்படுகிறது. அதிலும், ஆன்மீக காரியத்தில் இத்தகுதி அதிகமாக

எதிர்பார்க்கப்படும். இதில் தவறேதுமில்லை. இவ்வெதிர் பார்ப்பில் முழு நியாயம் உண்டு. மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

ஆனால், எது தகுதி என்பதற்கு நமது சமுதாயம் கொடுக்கும் விளக்கம் நியாயமானதாகவும் இல்லை. ஞானமானதாகவும் இல்லை. மெத்தப்படித்தவர்களுக்கும் பிரத்யேகமாக உடை அணிபவர்களும், சமுதாயத்தில் மேல் தட்டில் இருப்பவர்களும், மக்களின் சரீர, ஆன்மீக இச்சைகளுக்குத் தீனிபோடுபவர்களும், மனிதனின் மதியைப் புரட்டுபவர்களும், வெகுஜன அங்கீகாரத்தைப் பெற்றவர்களும் தான் தகுதியானவர்கள் என்று சொல்வது சரியாக இல்லை.

இவ்விஷயத்தில் ஆன்மீகத்தை நாடுகின்ற புற மதத்தவரின் நிலை படுமோசம். ஒருவேளை, விக்கிரக வணக்கத்திலிருப்பவர்கள் அறியாமல் செய்கிறார்களென்று எடுத்துக் கொண்டாலும், அதைவிட மோசம் கிறிஸ்தவசமுதாயம். பக்திக்குண்டான காரியத்திலும், இரட்சிப்புக் குண்டான விஷயத்திலும் தங்களுக்குச் சொல்கிறவர்களின் உலக தகுதி என்ன என்றுதான் குறிப்பாக கவனிக்கிறார்களேயொழிய, அவர்கள் என்ன சொல்கிறார்களென்பதைக் குறித்து கிஞ்சித்தும் கவலைப்படுவதாக இல்லை. பிரசங்கிப்பவர் வரம் பெற்றவரா? அவருக்கு ஆவியிருக்கிறதா? அனல் இருக்கிறதா? அங்கி இருக்கிறதா? ஜிப்பா இருக்கிறதா? கோட்டு அணிந்திருக்கிறாரா? பதவி இருக்கிறதா? பட்டம் இருக்கிறதா? அறிவு இருக்கிறதா? சொல்லாற்றல் இருக்கிறதா? என்றெல்லாம் பார்க்க ஆரம்பித்துவிட்டார்கள்.

நல்லவேளை கவர்ச்சி இருக்கிறதா? அழகு இருக்கிறதா? நிறம் இருக்கிறதா? பணம் இருக்கிறதா? என்றெல்லாம் கேட்பதில்லை. ஒருவேளை இவைகளைக் குறித்து மனதில் நினைத்தாலும் வெளியே சொல்வதில்லை. அதுவரை சந்தோஷமே.

ஆனால், இந்த "சீகார்" ஊரரோ முற்றிலும் வித்தியாசமான வர்களாக இருந்துள்ளார்கள். யார் சொல்வது என்பதைக் காட்டிலும், என்ன சொல்லப்படுகிறது என்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். ஒருவேளை நம்மைப் போல் சிந்திப்பவர்களாக இவர்கள் இருந்திருந்தால், அந்த சமாரியா ஸ்திரீயின் பேச்சைக் காதிலேயே போட்டிருக்கமாட்டார்கள். மேசியாவைக் குறித்து நீயா எங்களுக்குச் சொல்கிறாய் என்று ஏசியிருப்பார்கள். அல்லது உனது தவறான நடக்கைக்கு வேறொருவன் கிடைத்துவிட்டானா என்று எள்ளி நகையாடியிருப்பார்கள். ஒருவேளை அப்படிச் செய்திருந்தால், அவர்கள் மிகவும் துர்ப்பாக்கியசாலிகளாக மாறியிருப்பர். மாபெரும் ஆசீர்வாதத்தை இழந்திருப்பர்.

மாறாக, அவர்களுடைய அணுகுமுறையைக் கவனிக்கும் போது, ஞானமும், தெளிவும், ஆர்வமும் உச்ச நிலையிலிருந்ததை நாம் அறியலாம். தங்களுடைய அறிவார்ந்த அணுகுமுறையின் காரணமாக, தங்களையுமறியாமல் அவர்களுக்கு வெளியாக்கப்படாத வசனத்தின்படி நடந்துள்ளார்கள். "எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள்" என்பது தான் அவ்வசனம். 1 தெச. 5 : 21.

இந்த வசனம் இன்றைய கிறிஸ்தவர்களுக்கு மிகமிகத் தேவை. இயேசுவைப் பற்றிப் பிரசங்கிப்பவர்களின் உலகப்பிரகாரமான தகுதிகளை தராசில் நிறுத்துப் பார்க்கும் கொடிய பழக்கம் உடனடியாக மாறவேண்டும். இங்கே நான் குறிப்பிடுவது, ஒழுக்கமில்லாதவர்கள் சொன்னாலும் கேட்டுக் கொள்ள வேண்டுமென்பது அல்ல. மாறாக, பகட்டானவர்கள் பிரசங்கித்தால் தான் பக்கத்தில் வருவோம் என்று சொல்லும் நிலையைத் தான்.

இப்படிப்பட்டதான ஒரு மோசமான எதிர்பார்ப்பு, கிறிஸ்தவ சமுதாயத்தை நாசமாக்கிக் கொண்டுள்ளது. கடுமையான வார்த்தைகளை உபயோகிப்பதற்கு நான் வேதனைப்படுகிறேன். ஆனால், யதார்த்த நிலை அது தான். ஒருவேளை, புள்ளி விவரங்களின்படி கிறிஸ்தவம் தட்டுத் தடுமாறி வளர்ந்தாலும், பக்தி நிலையின் அடிப்படையில் அது வெகு வேகமாகத் தேய்ந்து கொண்டிருக்கிறது.

இயேசுவை, யூதர்கள் ஏற்றுக் கொள்ளாததற்குக் காரணமே அவர் என்ன போதிக்கிறார் என்று பாராமல், அவர் யார் என்று பார்த்தது தான். ஆம், அவருடைய வார்த்தையின் வல்லமையை அங்கீகரியாமல், அவரை தச்சனுடைய மகனாகவும், யூதா, யோசே என்பர்களுக்குச் சகோதரராகவும், கல்வியறிவில்லாதவராகவும், உழைத்துப் பிழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்தவராகவும் பார்த்தனர்.

யூதர்கள் இயேசுவை அப்படிப் பார்த்தது தவறு எனச் சொல்லிக் கொண்டே, அதே தவறை இன்றைய கிறிஸ்தவ சமுதாயம் இம்மியும் பிசகாமல் செய்கிறது. என்ன செய்வது? ஒருவேளை, சீகார் ஊரார் இயேசுவை அப்படி எண்ணியிருந்தால், அவரண்டை வந்திருக்க முடியுமா? கிறிஸ்துவைக் கண்டிருக்க முடியுமா? அவரை விசுவாசித் திருக்க முடியுமா? அவரை, மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலக இரட்சகர் என்று அறிக்கையிட்டிருக்க முடியுமா? சொல்லுங்கள்.

இனியாவது நம்முடைய ஆன்மீக காரியங்களில் விழிப்புடன் இருப்போம். பகட்டும், படோடாபமும் தான் தேவை என்ற நமது எண்ணத்திற்கு சவுக்கடி கொடுத்து விரட்டி விட்டு, நீதிக்குத் தலை வணங்குவோம். மேசியாவாகிய கிறிஸ்துவைப் பற்றியும், அவர் பூமிக்கு வந்த நோக்கம் பற்றியும்,

அவர் தம் சொந்த இரத்தம் சிந்தி சம்பாதித்த ஒரே சபை பற்றியும், அந்த சபைக்குள் இருக்க வேண்டிய அவசியம் பற்றியும், அந்த சபைக்காகத்தான் கிறிஸ்து வரப்போகிறார் என்பது பற்றியும் பிரசங்கித்தால் அக்கறையோடு கேட்போம். அதன் மூலம் இயேசுவை நம்முடைய வாழ்க்கையில் துல்லியமாக அறிந்து கொள்வோம்.

## 2. "கிறிஸ்துதானோ" என்று சொன்னவுடனே வந்தார்கள்:

இன்றைக்கு கிறிஸ்துவைப் பிரசங்கிக்க ஒரு கூட்டத்தைக் கூட்டுவதற்கு மதத் தலைவர்கள் படாதபாடு பட வேண்டியதாயிருக்கிறது. செயல்படுத்த முடியாத வாக்குறுதிகள் நிறைந்த வண்ணச் சுவரொட்டிகள் தேவைப்படுகிறது. அலங்கார விளக்குகளால் ஜோடிக்கப்பட்ட மேடை தேவைப்படுகிறது. மனதை மயக்கும் இன்னிசைக் குழுக்கள் தேவைப்படுகிறது. ஆட்களை அழைத்து வர வாகனங்களும், ஆகாரம் கொடுத்துத் தங்க வைக்க திருமண மண்டபங்களும் தேவைப்படுகிறது. மேலும்இவைகளைச் செய்து முடிக்க ஏராளமான பணமும் தேவைப்படுகிறது. இது எல்லாம் போக, மனிதனுக்கு அவனுடைய சரீரப் பாடுகள் அனைத்திலுமிருந்து விடுதலை கொடுக்கிறோம் என்ற பொய்யான உறுதி மொழியும் தேவைப்படுகிறது.

மேற்சொன்ன எவையும் இல்லாமல், ஒரு கூட்டத்தை கிறிஸ்துவண்டையில் அதாவது அவரைப் பற்றி அறிவிக்கும் கூட்டத்திற்கு அழைத்து வருவது மிக மிகக் கடினம். நமது பட்டணங்களின் நிலையும், கிராமங்களின் நிலையும் இது தான்.

ஆனால், இந்த "சீகார்" ஊரார் இக்காரியத்திலும் மிகுந்த வித்தியாசமுள்ளவர்களாகவே இருந்துள்ளார்கள். **"வந்து பாருங்கள்"**, அவர் **"கிறிஸ்துதானோ"** என்றாள். "அப்பொழுது அவர்கள் ஊரிலிருந்து புறப்பட்டு அவரிடத்தில் வந்தார்கள்" என்று வசனம் சொல்கிறது. (வ.30) அப்பொழுது, என்றால் "உடனே" என்று பொருள். இங்கே கவனித்தால், எந்த வாக்குறுதியும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

அவர்கள் உடனே புறப்பட ஏதுவாக இருந்த வார்த்தை, அவர் "கிறிஸ்துதானோ" என்பது தான். கிறிஸ்துதானோ என்ற வார்த்தை எப்படி இவர்களது வாழ்வில், இவ்வளவு செல்வாக்காய் இருந்து இவர்களைச் செயல்பட வைத்தது என்று விளங்கவில்லை. இத்தனைக்கும் இப்பஞ்சாகமத்தில், மேசியாவைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள் நிறைய இல்லை. இருப்பவைகளும், அப்படி ஒன்றும் நேரிடையான பொருளோடு இல்லை.

ஆயினும் அவர்கள் கிறிஸ்து என்ற வார்த்தையை கேட்டவுடன் ஓடிவந்தார்கள். அது எப்படி? தங்களிடமிருந்த வேதவாக்கியங்களின்

அடிப்படையில் அவைகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்ததின்படி மேசியாவை நாளும் எதிர்பார்த்திருந்துள்ளார்கள். ஆகவே தான் அவரைப் பற்றியதான செய்தி கிடைத்தவுடன் ஓடோடி வந்துள்ளார்கள்.

நம்முடைய நிலை எப்படி? சீகார் ஊரார் ஓடி வந்ததற்குக் காரணம், அவரைப் பற்றியதான எதிர்பார்ப்பு. அதற்கு அடிப்படை அவர்கள் நம்பியிருந்த முதல் ஐந்து ஆகமங்களும், அவைகளில் அவரைப் பற்றிச் சொல்லியிருந்தவைகளும் தான். இயேசுக் கிறிஸ்து மாம்சத்தில் ஒரு முறை வந்து சென்றுவிட்ட படியால் இனி மாம்சத்தில் வரப்போவதில்லை. ஆனால் அவருடைய வருகைக்காக எதிர்பார்த்துக் காத்திருக்கும் சிலாக்கியம் சீகார் ஊராருக்கு இருந்தது போல் சொல்லப்போனால் அதைவிட மேலாக நமக்கு உண்டு.

ஆனால், நாம் அவர்களைப் போல காத்துக் கொண்டுள்ளோமா? சிந்திப்போம். அவர்கள் ஆகமங்களின் அடிப்படையில் மேசியாவை எதிர்பார்த்தது போல நாம் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள புதிய ஏற்பாட்டின்படி அவரை எதிர்பார்த்துக் கொண்டுள்ளோமா? புதிய ஏற்பாட்டில் இயேசுக் கிறிஸ்து மீண்டும் வருகிறார் என்பதற்கு ஏராளமான சாட்சியங்களும், ஆதாரங்களும் உண்டு. வெளிப்படுத்தல் புத்தகம் 22ம் அதிகாரத்தில் மாத்திரம் அவர் மீண்டும் வருவதைக் குறித்து மூன்று முறை சொல்லப்பட்டுள்ளது. அது மாத்திரமல்ல வருகையில் யார் அவரோடு கூடச் செல்ல முடியும் என்றும், யார் பரம கானானுக்குள் பிரவேசிக்க முடியும் என்றும் வசனங்களில் தெளிவாக்கப்பட்டுள்ளது. நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள், வேத வாக்கியங்களின்படி அவரை எதிர்பார்த்ததால் தான், அம்மக்களால் அவரண்டை ஓடி வர முடிந்தது. நாமும் கூட வசனங்களின்படி எதிர்பார்த்தால் தான் அவரை எதிர்கொண்டு போக முடியும். மூட நம்பிக்கைகளும், போலிப் பக்தியும், பாரம்பரியங்களும், உள் உணர்வுகளும் நாம் அவரை விட்டு விலகி ஓடும்படியே செய்யும்.

ஆகவே, நாம் ஒவ்வொருவரும் புதிய ஏற்பாடு கொடுக்கும் உபதேசத்தை அப்படியே பின்பற்றக் கூடிய மக்களாக மாறுவோம். அவரை, ஆவலோடு சந்தித்து, அவரோடு கூட நித்திய நித்தியமாய் வாழ்வோம்.

## 3. உன் சொல்லினிமித்தம் அல்ல . . . நாங்களே கேட்டு . . . விசுவாசிக்கிறோம் என்றார்கள் :

இன்று, இயேசுவின் மீது நம்பிக்கை வைத்திருக்கும் பெரும்பாலானோருடைய நம்பிக்கைக்குக் காரணம், மற்றவர்கள் தான். பிறரால் போதிக்கப்பட்டு விசுவாசத்தைப் பெற்றுக் கொள்வது தவறானதல்ல. வேதவசனங்களின்படி (ரோம 10 : 17) அது சரியானதே. ஆனால் மற்றவர்கள்

சொல்கிறார்களென்பதற்காகவே அவர் மீது விசுவாசமுள்ளவர்களாக இருப்பது முறையானதல்ல. இப்படிப்பட்ட விசுவாசம் நீண்ட நாள் நிலைத்திருக்காது. ஒரு காலத்தில் பெருந்திரளாக இருந்து, ஒரு கட்டத்தில் காணாமல் போகும் நிலைமை, இப்படிப்பட்ட விசுவாசமுடையவர்களால்தான் ஏற்படுகிறது.

ஆனால், இதிலும், இந்த சீகார் ஊரார் நமக்கு வெகு சிறப்பான முன்மாதிரியாகவே திகழ்கிறார்கள். முதலில் " . . . . அந்த ஸ்திரீயினுடைய வார்த்தையினிமித்தம் தான் அந்த ஊரில் இருந்த அநேகர் அவர்மேல் விசுவாசமுள்ளவர்களானார்கள்" (வ. 39) ஆனால், அதன் பிறகான அவர்களின் செயல்பாடு போற்றுதற்குரியது.

ஆம், அவரிடத்தில் வந்து, அவரை விசுவாசித்து தங்களிடத்தில் இரண்டு நாள் தங்கும்படியாக வேண்டிக்கொண்டு, அவருடைய உபதேசத்தைக் கேட்டார்கள் (வ. 40, 41) ஒருவேளை, அவரிடம் அவர்கள் பல சந்தேகங்களைக் கூட கேட்டிருக்கலாம். சரி எப்படியோ, இரண்டு நாள் உபதேசத்தைக் கேட்டதற்குப் பிறகு, அவர்கள் என்ன சொன்னார்கள் என்று கூர்ந்து கவனியுங்கள். இது மிக முக்கியமானது. **"அந்த ஸ்திரீயை நோக்கி, உன் சொல்லினிமித்தம் அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலக இரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம் என்றார்கள்" (வ. 42).**

அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலக இரட்சகர் என்பதை, அவருடைய உபதேசத்தை ஆர்வத்தோடும், ஆசையோடும் கேட்டதால் கண்டு கொண்டார்கள், இந்த ஒதுக்கப்பட்ட சமாரியர்கள். ஆனால், சுயநீதிபேசித் திரிந்த யூதர்களாலே, அவரைக் கடைசிவரை அறிந்து கொள்ளவே முடியவில்லை.

இத்தனைக்கும் இவர்கள் மேசியா பற்றியதான 300க்கும் மேற்பட்ட தீர்க்கதரிசனங்களை அறிந்தவர்கள் ஆகையால், சமாரியரோ மூன்று, நான்கு மட்டும் தெரிந்தவர்கள். அது மாத்திரமல்ல, மேசியா எங்களுக்காகத்தான் வருவார் என்று உரிமை கொண்டாடியவர்கள். ஆனாலும், அவரைக் கண்டுகொள்ள முடியவில்லை. யூதர்களால் இயேசுக் கிறிஸ்துவுக்கு இப்பூமியால் நேர்ந்த நிலைபற்றி, யோவான் எப்படி எழுதியுள்ளார் பாருங்கள். **"அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார். அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை.** (யோவா 1:11).

ஆகையால், கிறிஸ்து யாரென்று நாம் உண்மையாக அறிந்து கொள்ள வேண்டுமென்றால், அதற்கு உள்ளப்பூர்வமான அக்கறை வேண்டும். வேதாகமத்தில் ஒருவருக்கு நிறையக் காரியங்கள் தெரியுமென்பது மாத்திரம், கிறிஸ்துவைச் சரியாக அறிந்து கொள்ளப் போதுமானதல்ல. ஏனெனில்

பரிசேயர், வேதபாரகர் போன்றோருக்கு அதிகம் தெரிந்திருந்தது. இன்னும், இயேசுவின் பின்னால் சென்று அவர் பேச்சைக் கேட்பதும் போதுமானதல்ல; ஏனெனில் யூதர்கள் மூன்றரை ஆண்டுகள் சுற்றித்திரிந்து கேட்டனர். பயனேதுமில்லை. மனிதன் விரும்பும் இன்னும் பல மேலான தகுதிகளும் யூதர்களுக்கு இருந்தது. ஆனாலும் அவை யாவும் அவர்களுடைய ஆன்மீகக் கண்களைத் திறக்கவில்லை யென்பதைக் கவனியுங்கள்.

எனவே, ஒருவன் கிறிஸ்துவை மெய்யாய்க் கண்டு கொண்டானா என்பதை, அவன் அவருடைய உபதேசத்தை எப்படிக் கேட்டு, எவ்வகையாய் ஏற்றுக் கொண்டான் என்பதை அடிப்படையாக வைத்தே சொல்ல முடியும். மாறாக, ஒருவன் தரித்திருக்கும் கிறிஸ்தவப் பெயரை வைத்தோ, எத்தனை தலைமுறையாக அவன் கிறிஸ்தவனாக இருக்கிறான் என்பதை வைத்தோ, வேதாகமத்தை எத்தனை முறை படித்து முடித்திருக்கிறான் என்பதை வைத்தோ, எவ்வளவு காலமாக கிறிஸ்தவனாக இருக்கிறான் என்பதை வைத்தோ, வாரம் தவறாமல் ஒருவன் ஆராதனைக்குப் போகிறானா என்பதைக் கொண்டோ சொல்ல முடியாது. இதற்குப் பலமான சாட்சி யூதர்கள்.

ஆகவே, நாம், நம்முடைய வாழ்க்கையில், இயேசு மெய்யாய் கிறிஸ்துவாகிய உலக இரட்சகர் என்று தெரிந்து கொள்ள வேண்டுமானால், அவருடைய உபதேசத்தை ஆர்வமாகப் படிக்க வேண்டும். அன்று சீகார் ஊராருக்கு அவர் நேரடியான போதனை கொடுத்தார். இன்றைக்கு அவருடைய போதனைகள் புதிய ஏற்பாட்டில் முழுமையாக அடங்கியிருக்கிறது. அந்தப் புதிய ஏற்பாட்டை பெரோயா பட்டணத்தாரைப் போல தினந்தோறும் ஆராய்ந்து பார்ப்பதின் மூலம் (அப் 17 : 11) இயேசுக் கிறிஸ்து யார் என்பதைத் துல்லிய்மாக அறிந்து கொள்ள முடியும்.

அன்பரே! நண்பரே! சீகார் ஊரார் "நாங்களே கேட்டு" என்று சொன்னது போல், நாமாகவே வாசித்து, ஜெபித்து, தியானித்து, அலசி ஆராய்ந்து பார்த்து, இயேசுவைக் கன கச்சிதமாகக் கண்டு கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் இயேசுக் கிறிஸ்து ஏற்றுக்கொள்ளும் இரட்சிப்பை வேத வசனங்களின்படி நாம் பெற்றுக் கொள்ள முடியும். அப்பொழுது தான் இயேசுக் கிறிஸ்து, அவர் கட்டின சபையில் நம்மை சேர்ப்பார். இயேசுக் கிறிஸ்துவின் சபைக்குள் இருப்பவர்கள் தான் அவரோடு மறுமைக்குள் பிரவேசிக்க முடியும். (எபே 5 : 26–27).

ஆகையால், எனதருமை வாசகரே, நாம் ஒவ்வொருவரும், ஏன் இந்த சீகார் ஊராரைப் போல் ஆகவேண்டுமென்பதை அறிந்திருப்பீர்களென நான் உண்மையாகவே நம்புகிறேன். இவர்களிடம் கண்ட, அந்த முப்பெருங்குணங்களின்படியாக நாம் ஒவ்வொருவரும் வாழ, பரலோகத்தின் தேவன் நமக்கு உதவி செய்வாராக! ஆமென்.

ராஜநாயகம்.

# தேவன் பேரில் விசுவாசம்

"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" (எபி. 11 : 1) என எபிரேய எழுத்தர் நமக்குச் சொல்லுகிறார். நம்பிக்கை, உண்மை, ஏற்றுக் கொள்ளுதல், கீழ்ப்படிதலை உண்டாக்குதல் என்றெல்லாம் கூட விசுவாசத்தைக் கூறலாம். இதன் அடிப்படையில் தான் ஒருவன் கிறிஸ்தவன் ஆகிறான். விசுவாசத்தினால் தான் தொடர்ந்து ஒருவன் கிறிஸ்தவனாக இருக்கிறான்.

மீண்டுமாக, எபிரேய எழுத்தர் கூறும் போது, "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" (எபி. 11 : 6) என்கிறார். தேவனை விசுவாசிப்பதில் இரண்டு காரியங்கள் இருப்பதை தயவு செய்து கவனியுங்கள். முதலாவதாக, அவர், இருக்கிறார் என்பதை ஒருவன் விசுவாசிக்க வேண்டும். அடுத்து, அவரைத் தேடுகிறவர்களுக்கு அவர் பலன் அளிக்கிறார் என விசுவாசிக்க வேண்டும். ஒருவனுடைய விசுவாசம் இதைவிடக் குறைவாக இருப்பின், அது எப்படி ஏற்றுக் கொள்ளப்படும்?

நம்மைச் சுற்றிலுமுள்ள பொருட்.களையெல்லாம் நாம் காணும்போது, பரலோகத்தில் ஒரு தேவன் இருக்கிறார் என்பதை விசுவாசிப்பதைத் தவிர வேறு என்ன செய்ய இயலும்? இங்குள்ள வானம், பூமி, மிருகங்கள், மனித ஜீவன்கள் மற்றும் அனைத்துப் பொருட்களும் படைத்தவர் ஒருவர் இருப்பதைச் சுட்டிக் காட்டவில்லையா? வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது" (சங். 19 : 1) என்றும், "தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான்" (சங். 14:1). என்றும் தாவீது அறிவித்தான்.

ஆனால், ஒரு தேவன் இருக்கிறார் என்பதை விசுவாசிப்பது மட்டும் போதுமானதல்ல. இயேசு கிறிஸ்து அவருடைய குமாரன் என்பதையும் விசுவாசிக்க வேண்டும். "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக : தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்" (யோவான் 14 : 1) என்று கிறிஸ்துவே கூறினார்.

இன்னும் பல வசனங்கள் இதே காரியத்தை உபதேசிக்கின்றன. கவனியுங்கள் : "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன எவனோ அவன் கெட்டுப் போகாமல், நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். (யோவான் 3 : 16). "அப்பொழுது இயேசு சத்தமிட்டு, என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் என்னிடத்தில் அல்ல, என்னை அனுப்பினவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறான்". (யோவான் 12 : 44).

கிறிஸ்துவை விசுவாசியாதவர்களின் நிலை என்ன? இந்த மனிதர்களைப் பற்றியும் வேதம் சொல்கிறது. கிறிஸ்து கூறினார் : "அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரே பேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாய் இராதபடியால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று" (யோவான் 3 : 18). "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாக இருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன் மேல் நிலை நிற்கும்" (யோவான் 3 : 36). "ஆகையால் நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள்" என்று உங்களுக்குச் சொன்னேன்; நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள். (யோவான் 8 : 24).

கர்த்தரை விசுவாசிப்பதால் கிடைக்கும் ஆசீர்வாதங்களைப் பற்றி மேற்கண்ட வசனங்களின் வழியாக நிச்சயமாக நாம் அறிந்து கொள்ள முடிகிறது. ஆனால், ஒரே சமயத்தில் அவரை விசுவாசிக்க மறுப்பவர்களுக்கு ஏற்படும் சாபங்கள், அழிவுகள், தண்டனைகள் பற்றியும் நாம் பார்க்க முடிகிறது.

தேவனையும், கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதையும் நாம் எந்த அளவிற்கு விசுவாசிக்க வேண்டும்? நாம் அவர்களை மனத்தளவில் ஏற்றுக் கொள்ளக்கூடும், ஆனால் அது மட்டும் போதுமா? நமக்கு விசுவாசத்தைக் காட்ட வேண்டும் அல்லது நிரூபிக்க வேண்டும் என தேவனுடைய வசனம் நமக்குக் கூறுகிறது. உதாரணமாக, கிறிஸ்து சொன்னார் : "என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிறதென்ன?" (லூக்கா 6 : 46). மீண்டும், "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பா னேயல்லாமல், என்னை நோக்கி : கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி :கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே

தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்'' (மத். 7 : 21 – 23) என்று சொன்னார். இப்போது, இந்த மக்கள் விசுவாசிகளாக இருந்தனர்; அதற்கும் மேலாக, மதப் பழக்க வழக்கங்களில் ஈடுபட்டிருந்தனர். ஆனால், என்ன தவறு செய்தனர்? பரலோகத்திலிருக்கிற பிதாவின் சித்தத்தின்படி அவர்கள் நடக்கவில்லை.

நாம் எதைச் செய்ய வேண்டுமென்பது அவர் சொல்லுகிறாரோ, அதைச் செய்யும் அளவிற்கு கர்த்தரை நாம் விசுவாசிக்க வேண்டும்; எனவே தான் விசுவாசம் மட்டுமே நம்மை இரட்சித்து விடாது, ஏனெனில் அது ஒரு செத்த விசுவாசமாக இருக்கிறது. ''அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்'' (யாக். 2:17) என யாக்கோபு எழுதினார். தொடர்ந்து அவர் கூறும்போது, ''ஆதலால், மனிதன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறான் என்று நீங்கள் காண்கிறீர்களே'' (யாக். 2 : 24) என்றார்.

இறுதியாக, ''அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறது போல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது''. (யாக் 2:26). மேலே கண்ட பல வசனங்களிலும், பரிசுத்த ஆவியால் ஏவப்பட்டு எழுதிய எழுத்தால், வெறும் விசுவாசம் மட்டும் இரட்சிப்புக்குப் போதாது என்றும் அதிகத் தேவைகள் உள்ளன என்றும் நமக்குக் காட்டுகிறார். அதற்கு ஆதாரமான பல வசனங்களைச் சுட்டிக் காட்டுகிறார்.

விசுவாசம் மட்டும் போதும் என்று போதிக்கிறவர்களும் கற்றுக் கொடுப்பவர்களும் சில சமயங்களில் யோவான் 3 : 16ம் வசனத்தை தங்களின் நிலைக்கேற்ற உதாரணமாகக் காட்டுகின்றனர். என்றபோதிலும், விசுவாசம் மட்டும் போதும் எனக் கிறிஸ்து அங்கே சொல்லவில்லை. மாறாக, நாம் தேவனை விசுவாசித்தால் நாம் வீழ்ந்து போகமாட்டோம், நித்திய ஜீவனை அடைவோம் என்பதாக அவர் காட்டுகிறார். ஆனால், கேள்வி என்னவென்றால் : ஒரு மனிதன் உண்மையிலேயே தேவனையும் அவருடைய வசனத்தையும் விசுவாசித்தால், அவன் என்ன செய்வான்? சந்தேகமின்றி, ''அவன் கர்த்தருக்குக் கீழ்ப்படிவான், என்பதுவே முழுக் கருத்தாகும்.

ஆம், விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம்.

(ரோமர் 5 : 1). ஆனால், விசுவாசத்தினால் மட்டும் அல்ல. விசுவாசத்தின் மூலமாக கிருபையால் நாம் இரட்சிக்கப்படுகிறோம். (எபே. 2 : 8, 9). ஆனால் விசுவாசத்தினால் மாத்திரம் அல்ல. மனந்திரும்புதல், திருமுழுக்குப் பெறுதல், கிறிஸ்தவ வாழ்க்கை ஆகிய அனைத்தும் இன்றி ஒருவர் இரட்சிக்கப்படக் கூடும் என நிச்சயமாக ஒருவர் விவாதிக்கமாட்டார். என்றபோதிலும், விசுவாசம் மட்டும் போதும் எனப் போதிக்க ஒருவன் அந்த நிலைக்குத் தள்ளப்படுகிறான். உண்மையில், முழுப்பிரச்சனையும் விசுவாசத்தின் அர்த்தத்தில் தான் அடங்கியுள்ளது. செயல்படும் விசுவாசம், அசையும் விசுவாசம், கிரியை செய்யும் விசுவாசம், கீழ்ப்படியும் விசுவாசம் என விசுவாசத்தின் வகைகளை வேதாகமம் கூறுகிறது. ஒரு நோயாளியான மனிதனை தம்மிடம் கொண்டு வந்தவர்களின் விசுவாசத்தை இயேசு பார்த்தார் என நாம் படிக்கிறோம். (மத்தேயு 9 : 2). விசுவாசத்தைப் பற்றி நாம் பேசுவதை மட்டும் கேட்காமல், நமது விசுவாசத்தை அவர் காண விரும்புகிறார். நமது செயல்களாலும், அவருடைய கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்படிவதாலும் அதை நாம் வெளிப்படுத்துவதை அல்லது நிரூபிப்பதை அவர் காண விரும்புகிறார். இல்லாவிட்டால், நமது விசுவாசம் செத்ததும் வீணானதும் ஆகும்.

கிறிஸ்துவின் நற்செய்தியின் கட்டளைகளில் விசுவாசமும் ஒன்றாகும். தேவனுடைய வசனத்தைக் கேட்பதால் அது வருகிறது. (ரோமர் 10 : 17). ஒரு தனிப்பட்ட மனிதன் தனது பாவங்களுக்காக மனஸ்தாபப்படவும், கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிடவும், பாவங்கள் மன்னிக்கப்பட திருமுழுக்குப் பெறவும், அது ஒருவனை வழிநடத்துகிறது. அடுத்து வரும் பாடங்களில் அவை பற்றி தனித்தனியே கவனிப்போம். ஆனால் இந்த விசுவாசம் இன்றி இந்தக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய இயலாது. உண்மையான விசுவாசம் இருந்தால், கீழ்ப்படிதல் தானாகவே அதைத் தொடரும். கர்த்தருடைய கட்டளைகளை சந்தேகித்து அது கேள்விகள் கேட்காது; ஆனால் அவற்றின்படி அது நடக்கும். அவருடைய உபதேசத்தை அது தள்ளிவிடாமல் அதற்குக் கீழ்ப்படியும்.

“விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்” (மாற்கு 16 : 16) எனக் கிறிஸ்து கூறினார். ஒருவன் விசுவாசிக்காவிட்டால் கர்த்தருக்குக் கீழ்ப்படிய மாட்டான் என்பது இயற்கையே. அதே சமயத்தில், விசுவாசித்தால், கிறிஸ்துவுக்கு அவன் கீழ்ப்படிவான். அதாவது, அதின் பயனாக அவன் திருமுழுக்கு பெறுவான். இது எவ்வளவு எளிதான காரியமாக இருக்கிறது.

அப்போஸ்தலருடைய நடபடி புத்தகத்தில் காணப்படும் எல்லா மனந்திரும்புதல்களிலும், பாவிக்குப் போதிக்க ஒரு போதகர் காணப்படுகிறார். எனவே, அவன் கேட்கிறான், நற்செய்தியை விசுவாசிக்கிறான்; பாவங்களுக்காக மனஸ்தாபப்படுகிறான்; கிறிஸ்துவை அறிக்கை செய்கிறான்; பாவங்கள் நீங்க திருமுழுக்குப் பெறுகிறான். என்ன நடக்கிறது? ஒரு முறை அந்த தனிப்பட்ட மனிதன் நற்செய்தியைக் கேட்டு, அதை விசுவாசிக்கும் நிலைக்கு வந்துவிட்டால், பிற காரியங்களைச் செய்வதில் அவனுக்கு எந்தப் பிரட்சனையும் இருக்காது. ஏனெனில், அவன் இப்போது கர்த்தரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய தயாராக இருக்கிறான். அவன் விசுவாசிக்கிறானா இல்லையா என்பதில் தான் எல்லா காரியங்களும் சார்ந்திருக்கின்றன.

விசுவாசம் இல்லாத ஒரு கூட்டத்தைப்பற்றி அப்போஸ்தலருடைய நடபடி 2ம் அதிகாரத்தில் நாம் படிக்கிறோம். அதில் சிலர் இயேசுவை சிலுவையில் அறைந்ததில் பங்கு பெற்றவர்களாக இருந்தனர். பேதுருவும் பிற அப்போஸ்தலர்களும் நற்செய்தியை அவர்களுக்குப் போதித்தனர். கிறிஸ்து எப்படி உண்மையிலேயே தேவனுடைய குமாரனாக இருக்கிறார் என்பதை அவர்களுக்குக் காட்டினார்கள். பின்னர், அவர்கள் திருப்தி அடைந்தவர்களாக கேட்ட ஒரு கேள்வி மிக எளிதானது : “நாங்கள் என்ன செய்ய வேண்டும்?” (அப். 2 : 37). வேறுவிதமாகக் கூறினால், இப்போது தங்களுடைய விசுவாசத்தை அவர்கள் செயலில் காட்டத் தயாராக இருந்தனர். மேலும், ஏறக்குறைய மூவாயிரம் பேர் அவ்வாறு செய்தனர். (அப். 2 : 41). பிலிப்பு நற்செய்தியை சமாரியருக்குப் போதித்தான், பலர் விசுவாசித்து திருமுழுக்குப் பெற்றனர் என்று பதிவேடு கூறுகிறது. (அப். 8 : 12). எத்தியோப்பிய மந்திரிக்கு கிறிஸ்துவை பிலிப்பு போதிக்கும் போது, அவன் விசுவாசித்து, என்ன செய்ய வேண்டுமென சொன்னபடியே கீழ்ப்படிந்து செய்து, அவன் வழியே மகிழ்ச்சியாக சென்றான் என வசனம் கூறுகிறது. (அப். 8 : 26 – 39). இரட்சிக்கப்பட விசுவாசிக்க வேண்டும் என்று சிறை அதிகாரியிடம் பவுலும் சீலாவும் கூறிய நிகழ்ச்சியை அப்போஸ்தலருடைய நடபடி 16ம் அதிகாரத்தில் நாம் பார்க்கிறோம். ஆனால் அவன் விசுவாசமற்றவனாக இருந்தான். எனவே அவனும் அவனது வீட்டாரும் விசுவாசிக்கும்படியாக தேவனுடைய வசனத்தை அவர்கள் போதித்தனர். பின்னர், வசனம் கூறுவது போல, அதின் விளைவாக, சிறை அதிகாரி அவர்களுடைய காயங்களை கழுவி, மனந்திரும்பி அவனும் அவன் வீட்டாரும் உடனே திருமுழுக்குப் பெற்றனர். (அப். 16 : 30 –33). பிற மனந்திரும்புதல்கள் அனைத்தும் இதே முறையில் நடந்தன என்பதே உண்மை.

இறுதியாக, ஒரே விசுவாசம் மட்டுமே இருப்பதே வேதம் கற்பிக்கிறது. (எபே. 4 : 5). ஒரே வேதாகமம் மட்டுமே உள்ளது. அதை எல்லாரும் ஏற்றுக் கொண்டு, விசுவாசித்தால் நாம் எல்லாருமே அதே விசுவாசத்தை உடையவர்களாக இருப்போம். அந்த ஒரே விசுவாசம், ஒரே காரியத்தைச் செய்ய நம் அனைவரையும் வழிநடத்தும். அதாவது, கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, அவருக்கே விசுவாசமுள்ளவர்களாக இருக்கச் செய்யும்.

**J.C. Choate**

**உங்களுக்கு தெரியுமா?**

## 1. எபேசு பட்டணம்

1. *இது கிரேக்க மன்னர் மகா அலெக்ஸாண்டர் காலத்திலேயே இருந்தது.*
2. *இங்கு கிரேக்கர்கள் குடியிருந்தனர்.*
3. *கி.மு. 334 க்கு பிறகு ரோமர் ஆட்சிக்கு வந்து குடியேறினர்.*
4. *இந்த பட்டணத்தில் கலப்பு கலாச்சாரம் தோன்றியது.*
5. Artemic Diana *என்ற கோவில் அரண்மனையை விட பெரியதாக இருந்ததாம்.*
6. *இதில் உள்ள சிலை ஒரே கல்லில் ஆனது. இது பரலோகத்தில் இருந்து விழுந்ததாக கருதினர்.*
7. *இந்தக் கோவிலுக்குள் வாழ்ந்த மக்கள் மிக மோசமானவர்கள்.*
8. *கி.பி. 262 ல் இப்பட்டணமும் கோவிலும் அழிந்தது.*
9. *அப்போஸ்தலனாகிய பவுல் இங்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவித்து சபையை ஸ்தாபித்தார்.*

# கிறிஸ்தவப் பெண்களின் முழுமையான குணங்கள்

கிறிஸ்தவப் பெண்களின் முழுமையான குணங்கள் என்றால் என்ன? நாம் ஒரு முழுமையானவர்களாகத் திகழ வேண்டுமென்பதற்காக தேவன் நமக்கு விசேஷித்த பண்புகளைக் கொடுத்திருக்கிறாரா? இந்த இரண்டு கேள்விகளில் முதல் வினாவிற்கு பதில் ஒரே வரியில் தர இயலாது. ஏனெனில் முழுமையான குணங்கள் என்பது பல காரியங்களை உள்ளடக்கியது.

ஆனால் இரண்டாம் வினாவுக்கு விடை "ஆம்" ஆக இருப்பதால், நம்மை வழிநடத்த நாம் உலகத்தின் ஞானத்தை சார்ந்திருக்க தேவையில்லை. தேவன் நம் தேவைகளை அறிந்திருக்கிறார். நமக்கேற்ற உபதேசங்களை கொடுத்து நம் வாழ்க்கை ஓட்டத்தை கடக்கச் செய்கிறார். அவரது துணைகொண்டு அவர் கூறியதை செய்வோம்.

தேவனுடைய பார்வையிலே பூரணமான (அல்லது) முழுமையானவர் களாகத் திகழ நாம் பெற்றுக் கொள்ள வேண்டிய விசேஷித்த பண்புகளை, வேத வசனங்களின் ஆதாரத்தோடு பார்ப்போம்.

**கலாத்தியர் : 5 : 22 – 24,**
**கொலோசேயர் : 3 : 12 – 14.**
**II பேதுரு 1 : 5–9**

மேற்கூறிய வசனப் பகுதிகளைப் படித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். இதில் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து குணாதிசயங்களையும் விரிவாகப் பார்க்காவிடினும், சில குணங்களை சற்று ஆராய்ந்து நம் வாழ்க்கை யோடு அவற்றைப் பொருத்திப் பார்ப்போம்.

**"விசுவாசம்" ஒரு முழுமையான வாழ்வுக்கு அஸ்திபாரம் :**

"விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம்" என்று எபிரேயர் 11ம் அதிகாரம் 6ம் வசனத்தில் பார்க்கிறோம். கிறிஸ்தவத்தின் அஸ்திபாரமே விசுவாசம்தான். இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்றும், அவர் பூமிக்கு வந்து நம் பாவங்களுக்காக மரித்தார் என்றும், வல்லமையாய் உயிர்த்தார் என்றும் விசுவாசியாவிட்டால் நாம் மார்க்கரீதியாக எந்த ஒரு அடிப்படையும் இல்லாத

வர்களாகத்தான் இருப்போம். இந்த விசுவாசத்தை நாம் எவ்வாறு பெற்றுக் கொள்ள முடியும்? நாம் உணர்ந்து பார்க்கக் கூடிய அளவில் ஏதோ விநோதமான முறையில் கொடுக்கப்பட்டுள்ளதா? ரோமர் 10 : 17-ம் வசனத்தில் இதற்க்கான விடை தரப்பட்டுள் ளது. 'விசுவாசம் தேவனுடைய வார்த்தையின் மூலம் கிடைக் கிறது. அதை விசுவாசித்து, அதன் கட்டளைக்குக் கீழ்ப்படிகிறோம். விசுவாசம் வல்லமையானது, இதை ஒரு 'பசைக்கு நாம் ஒப்பிடலாம். நம்முடைய வாழ்க்கைக்கான பிற பண்புகளை போற்றிப் பாதுகாப்பதற்கு இந்த விசுவாசம் பெரிதும் உதவுகிறது. நாம் இதைப் புறக்கணித்து விட்டால் நம்மை பாதுகாக்கக் கூடிய தேவனுடைய வல்லமைக்கு புறமுதுகு காட்டுகிறவர்களாக மாறிவிடுவோம்.

## II. "அன்பு" என்பது கிறிஸ்தவர்களின் தலைசிறந்த குணமாகும் :-

நம்மில் காணப்படும் எல்லா குணங்களும் அன்பினால் மெருகேற்றப்படாதவைகளாக இருந்தால் அவைகள் பயனற்றவைகளாக கருதப்படுகின்றன. "அன்பு" என்பது நம்மை தேவனுக்குக் கீழ்ப்படியச் செய்யும் ஒரு மாபெரும் விசையாக இருக்கிறது. நண்பர்களென்றும், பகைவர்களென்றும் பாராது அனைவருக்கும் நன்மை செய்யச் சொல்லி நம்மை தூண்டுவது அன்பாகும். அன்பு அமைதியாக இராது. செயல்படுத்தும் ஒரு காரணியாக இருக்கிறது. அன்பு ஒன்றைக் கொடுக்கிறது, ஒன்றைச் செய்கிறது. தேவன் நம்மீது வைத்த அன்பினிமித்தமாக தன் ஒரே மைந்தனைக் கொடுத்தார் என்று யோவான் 3 : 16-ல் வாசிக்கிறோம். கிறிஸ்தவப் பெண்களாகிய நாம் இந்த அன்பை நம் வாழ்வின் எல்லாக் கட்டத்திலும் அணிந்து கொள்ளவேண்டும்.. கொலோசேயர் 3 : 14-ம் வசனம். "பூரண சற்குணத்தின் கட்டு" என்று இந்த அன்பை அழைக்கிறது. தேவனுடைய கண்களில் இருந்து பூரணத்தைப் பெற்றுக் கொள்ள விரும்புவோமானால் அன்பு நம் வாழ்வில் ஆதிக்கம் செலுத்துவதாக இருக்க வேண்டும்.

## III. கிறிஸ்தவப் பெண்கள் கவலையுடன் இருக்கக் கூடாது :

எப்படி "ஞானஸ்நானம்" என்பது ஒரு கட்டளையாகக் கொடுக்கப்பட்டதோ அதேபோல் தான் "கவலைப்படாதிருங்கள்" என்பதும். நாம் எதற்கும் கவலைப் படக் கூடாது. கவலைப்படுவதால் எதையும் சாதித்து விட முடியாது. பிரச்னைகளுக்கு விடுதலையும் காண இயலாது. நம்முடைய பிரச்சனைகளை உண்மையான, சரியான முறையில் சந்திக்க வேண்டும். "நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவ

ற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத் தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" என்று பிலிப்பியர் 4 : 6–ல் வாசிக்கிறோம். அதைவிடுத்து நாம் கவலைப் பட்டுக் கொண்டிருப்போமானால் நம்முடைய நேரம், பலம், முயற்சி இவை யாவும் வீணாகப் போய் விடும். "உன் செய்கைகளை கர்த் தருக்கு ஒப்புவி. அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும்" (நீதி : 16 : 3). " அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள்" (I பேதுரு 5:7). நம்முடைய பாரங்களை ஏற்றுக் கொள்ள அவர் தயாராகவே இருக்கிறார். எவ்வளவு பெரிய, சுமக்க இயலாத பாரங்களையும் நாம் தூக்கிச் சென்றாலும் அவரின் துணை யோடு சுலபமாக அவைகளை தீர்க்க முடியும். நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக் கிறாரே (எபிரேயர் 13 : 5). நம்மை விசாரிப்பவர் அவர் என்பதை அறியும்போது எவ்வளவு ஆறுத லாகவும், தேறுதலாகவும் உள்ளது! அவருடைய உதவியை நாடுவது மட்டுமே, நமக்கு அவசியம்.

**IV. கிறிஸ்தவப் பெண் சாந்தமும், தயவும் உள்ளவளாக இருக்கவேண்டும்;**

பெண்களுக்கே உண்டான இந்த சாந்தத் தன்மையைக் குறித்து, ஆயிரக்கணக்கான வார்த்தைகளை எழுத்தாளர் களும், கவிஞர்களும் கையாண் டுள்ளனர். எல்லா குணங்களையும் விட "சாந்தம்" என்று சொல்லக் கூடிய தன்மையை விசேஷமாக தன்னகத்தே பெற ஒரு பெண் ணால்தான் முடியும். ஆனால் நாகரீக நாட்களாகிய இந்நாட் களில் ஆண்களோடு சம உரிமை வேண்டும் என்று வாதாடி, அதோடு நில்லாமல், ஆண் களுக்கே உண்டான சில குணங்களையும் பெற்றுவிடு கிறார்கள் பெண்கள். கடந்த கால பெண்களிடம் காணப்பட்ட சாந்தம், தயவு போன்ற குணங்கள் தற்கால பெண்களிடம் குறைந்த அளவே காணப்படுகிறது. கடுமை யான குரலில் பேசுவது, ஆண் களுக்குரிய ஆடைகளை அணிவது, ஏதாவது ஒன்றின்மீது ஆதிக்கம் செலுத்துவது போன்ற ஆண்களின் குணங்களை பெண் களும் பெற்று விடுகின்றனர். கிறிஸ்தவப் பெண்கள் இத்தகைய குணங்கள், தங்களை மேற்கொள்ள ஒருபோதும் இடம் கொடுக்கவே கூடாது. அவள் பெண்மைத் தன்மையோடு திகழ வேண்டும். நீதி : 31ம் அதிகாரத்தில் சித்தரிக்கப் படும் பெண்ணாக திகழ வேண்டும். சாந்த குணம் என்பது ஒரு கண்ணாடி போன்றது. அதன் மூலம் நாம் மற்றவர்களை புரிந்து கொள்ள முடியும்.

**V. கிறிஸ்தவப் பெண் பொறுமை உள்ளவளாக இருக்க வேண்டும் :**

எல்லா குணங்களையும் விட "பொறுமை" இன்றைக்கு கிறிஸ்தவப் பெண்களுக்கு மிகவும் தேவையாக உள்ளது. நமக்கு நாமே பொறுமையற்றவர்களாக இருக்கிறோம். நம்முடைய கணவர் மீதும், குழந்தை களிடமும், சக கிறிஸ்தவர்களிடம், நம்மை சுற்றியிருக்கிற அனைத் தின் மீதும் பொறுமையற்றவர்களாக இருக்கிறோம். காரணம் எதிலும் வேகம், எங்கும் வேகம். பொறுமையை இழக்கிறோம். "பொறுமை" என்பதும் தேவன் கட்டளையாகக் கொடுத்த ஒன்று. "உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக் கொள்ளுங்கள்" (லூக். 2:19). நீண்டகால துன்பத்திற்கு பிறகு தான் சிறந்த பரிசைப் பெற்றுக் கொள்ள முடியும். தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும், ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாயிருப்போம் (ரோமர் 15:4). "உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்கு மென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்" (யாக். 1:5). பூரணராய் விளங்கு வதற்கு பொறுமை அவசியம் என்று யாக்கோபு ஆசிரியர் கூறுகிறார். சோதனை, துன்பங்கள் வரும் போது தேவனிடம் கிட்டிச் சேர்ந்து அவர்களைப் பொறுமையோடு ஏற்றுக் கொள்ளப் பழக வேண்டும். "எல்லாம் நன்மைக்கே" என்று அறியப் பழகிக் கொள்ள வேண்டும்.

**VI. கிறிஸ்தவப் பெண் வாழ்க்கையை ரசிக்க கற்றுக் கொள்ள வேண்டும்.**

பெண்களாகிய நாம் எப்போதும் நம்முடைய வீட்டு வேலைகள், குழந்தைகள், மற்ற காரியங்கள் என்று ஏதோ ஒரு வேலையில் ஈடுபட்டு நம்மைச் சுற்றியுள்ள அழகான காரியங்களை ரசிக்க முடியாமல் போய் விடுகிறோம். ஆனால் நம் நலனுக்கென்றும், நம்முடைய மகிழ்ச்சிக்கென்றும், தேவன் நம்மைச் சுற்றி உண்டாக்கி வைத்திருக்கும் எல்லாவற்றையும் குறித்து நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

வீடுகளை சுத்தமாக வைப்பது, தட்டு முட்டு சாமான் களை அழகாக வரிசைப்படுத்தி வைப்பது, ருசியுள்ள உணவு சமைப்பது போன்ற காரியங்களிலும் அழகு இருக்கவே செய்கிறது. அன்றாடம் அவைகள் நமக்கு வழக்கமாக போய்விட்டதால் அவைகளை நாம் கண்களால் ரசிக்க முடிவதில்லை. வேத பாடங்களை ஆராய்ந்து படிப்பது, பக்தியுள்ள பாடல்களை பாடுவது, போன்றவற்றையும் ரசனையோடு செய்ய பழகிக் கொள்ள வேண்டும். நல்ல மனைவியாகவும், தாயாகவும் இருப்பதே ரசிக்கக் கூடிய ஒரு காரியம்தான். பிள்ளைகள் மூலம்

தேவனின் சிருஷ்டிப்பின் அழகைக் காணலாம். அழகே இல்லாத ஒரு இடத்தை நாம் காண முடியாது. ஆனால், எல்லா வற்றுக்கும் மேலாக, தேவனின் அழகு உண்டு. அந்த அழகை நாம் மிக ஆர்வமாகத் தேட வேண்டும். "கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்; நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவரு டைய ஆலயத்தில் ஆராய்ச்சி செய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம், கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதே நாடுவேன்" (சங். 27 : 4) என்று தாவீது கூறுகிறார்.

நாம் முதலில் பார்த்த, மூன்று வசனப் பகுதியிலுள்ள அனைத்து பண்புகளையும் விரிவாக விவாதிக்க இங்கே முடியாது. ஆனால் சொல்லப் பட்டுள்ள அனைத்து பண்பு களையும் தன்னுடைய வாழ்க்கை யின் அங்கமாக்கிக் கொள்ள ஒரு கிறிஸ்தவப் பெண் கடுமையாக முயற்சிக்க வேண்டும். இங்கே, அவள் பூரணமாக நித்திய வீட்டிற்கு தன்னை ஆயத்த மாக்கிக் கொண்டுள்ளாள். அதைப் பெற்றுக்கொள்ள இந்த குணங்கள் மிக அவசியம். ஆகவே, அவை களை நம்முடைய வாழ்க்கையில் பெற்றுக் கொள்வோமாக!

**தமிழில் R.R..நாயகம்**

## தரியு. யூத மக்களுக்கு கொடுத்த கட்டளை

1. எருசலேம் தேவாலயத்தை யூதரின் மூப்பர்கள் மட்டுமே கட்ட வேண்டும்.
2. எந்த மனிதனும் தடை செய்யக் கூடாது, அந்த தேவா லயத்தைக் கட்டுவதற்கு பொன், வெள்ளி, பொருள்களும் பலி செலுத்துவதற்கு தலையீற்று ஆட்டுக்குட்டிகள், இளங்காளைகள் கொடுக்கப்பட வேண்டும்.
3. இந்த தேவாலயத்தை கட்ட தடை செய்பவன் கொல்லப் பட வேண்டும் அவனுடைய வீடு குப்பை மேடாக்கப்படும்.

எஸ்ரா 6 :1 –12

# இயேசுவின் இரத்தம்

தேவனுக்கும், மனிதனுக்கும் இருந்த உறவில், எப்பொழுதும் இரத்தத்திற்கு ஒரு பங்கு இருந்துள்ளது. பழைய ஏற்பாட்டின் காலத்தில் மிருகங்கள் பலியாகச் செலுத்தப்பட்டுள்ளதால் இதை உண்மையென்று அறியலாம். ஆனால் இந்தப் பலிகள் பாவங்களை நிரந்தரமாக எடுத்துப்போட முடியவில்லை. எபிரேய ஆசிரியர் இது குறித்து இப்படியாகக் குறிப்பிடுகிறார். “அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவர்த்தி செய்யமாட்டாதே” (எபி 10 : 4) ஆக, மிருகங்களின் இரத்தம் மனிதனின் பாவங்களை நீக்கமுடியாதெனில், மனிதன் எப்படி இரட்சிக்கப்பட முடியும்? பாவிகள் தங்கள் பாவத்திலிருந்து கழுவப்படும்படியாக, இயேசுவின் இரத்தம் ஒரே தரம் சிந்தப்பட்டிருக்கிறது எனவும், அந்த இரத்தத்தோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் அது சாத்தியம் என்றும் புதிய ஏற்பாடு சொல்கிறது. ஆகையால், இங்குதான் நமது பாடம் துவங்குகிறது.

மனிதன் பாவியாக இருப்பதால், அவன் தன்னைத்தானே இரட்சித்துக் கொள்ள முடியாது. ஆகவே தான் பவுல் சொல்கிறார். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணினார். (ரோம 5 : 8) என்று. இன்னும் 1 கொரி 15 : 3ல் கிறிஸ்து வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார் என்றும் கூறுகிறார். நாம் பாவத்திலிருந்து மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளும்படியாக, இயேசுவின் இரத்தம் அவருடைய மரணத்தின் மூலம் சிந்தப்பட்டது. இப்பொழுது கேள்வி என்னவெனில், நாம் எப்படி அந்த இரத்தத்தோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்கிறோம்? என்பது தான். ஒருவேளை மத உலகத்திலுள்ள பெரும்பாலோர், விசுவாசத்தால் என்று சொல்வார்கள். நன்று, விசுவாசம் அவசியமான ஒன்று தான். ஆனால் அது மட்டும் போதுமானதல்ல. வேதாகமத்தை நாம் படிக்கும் பொழுது, நாம் கீழ்ப்படியவேண்டுமெனவும் (எபி 5 : 8, 9) வசனத்தின்படி செய்ய வேண்டுமெனவும் (யாக் 1 : 22) அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ள வேண்டுமெனவும் (யோவான் 14 : 15) அறிந்து கொள்கிறோம். ஆகையால், நாம் அவருக்குக் கீழ்ப்படியும் பொழுது, அவருடைய இரத்தத்தோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்கிறோம் என்று அனுமானித்துக் கொள்ள முடியும்.

இப்பொழுது, நாம் என்ன செய்ய வேண்டுமென அவர் கட்டளையிட்டிருக்கிறார்? இங்கே சில வசனங்களைக் கவனிப்போம். உதாரணமாக "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" எனச் சொல்லியுள்ளார். (மாற் 16 : 16) விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுவதன் மூலம் ஒருவன் இரட்சிப்பை பெறலாம் என்று கிறிஸ்து சொல்லியுள்ளபடியால், கீழ்ப்படிதலின் மூலம் இயேசுவின் இரத்தத்தோடு தொடர்பை ஏற்படுத்தி, அதன் மூலம் பாவத்திலிருந்து கழுவப்படுகிறான் என்று முடிவுக்கு வருகிறோம். மீண்டுமாக திரளான பாவிகளடங்கிய ஒரு கூட்டத்தைப் பார்த்து பேதுரு இவ்விதமாகச் சொல்லியுள்ளார். " .....நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் (அப். 2 : 38) என்று. இயேசுக்கிறிஸ்து தம்மைத்தாமே பரிபூரணமான பலியாகக் கொடுத்து, மனிதன் இரட்சிக்கப்படும் படியாய்த் தனது இரத்தத்தைச் சிந்தியுள்ளபடியால், நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் என்ற கட்டளைக்கு கீழ்ப்படிவதன் மூலம், பாவம் போக அவருடைய இரத்தத்தோடு நாம் தொடர்பை ஏற்படுத்திக் கொள்கிறோம் என்ற முடிவுக்கு மீண்டும் ஒரு முறை வருகிறோம். மறுபடியும் சவுலின் மனமாற்றம் குறித்து அனனியா சொல்லும் போது, "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போக கழுவப்படு என்றான்" (அப் 22 : 16). ஆனால், ஞானஸ்நானம் எப்படி பாவத்தைக் கழுவுகிறது? அங்கே தண்ணீரில் எதுவும் இல்லை. ஆனால் அங்கே, முக்கியமாகப் பார்க்கப்படுவது கீழ்ப்படிதல் தான். ஆகையால், ஒருவன் கர்த்தருக்குக் கீழ்ப்படியும் பொழுது, இயேசுவின் இரத்தம் அவனைப் பாவமறக் கழுவுகிறது. இது மிக எளிமையாகப் புரிந்து கொள்ளக் கூடியது.

ரோமர் 6 : 3-6 வசனங்களுக்குத் திருப்பி அப்போஸ்தலன் பவுல் என்ன சொல்கிறார் எனப் பாருங்கள். "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனை வரும் அவருடைய மரணத்துக்குள்ளாக, ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே, கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே, கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால்

அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவ சரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்". பவுல் இங்கே என்ன சொல்கிறார்? நம்முடைய கீழ்ப்படிதலினாலே, கிறிஸ்துவின் மரணத்தை அடைந்தோம் அல்லது அவருடைய மரணத்தினாலான நன்மைகளை பெற்றுக் கொள்ள முடிந்தது என்கிறார். அதாவது கீழ்ப்படிதலின் மூலம் இயேசுவின் இரத்தத்தை நாம் அடைந்து, அந்த இரத்தத்தினாலே நாம் கழுவி சுத்திகரிக்கப்பட்டோம் என்று கூறுகிறார். எபேசியார் 1 : 7ல் பவுல் இப்படியாகக் கூறுகிறார்". இவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் உண்டாயிருக்கிறது என்று. மேலும் மத் 26 : 28ல் இயேசுக் கிறிஸ்துவே பாவமன்னிப்புண்டாகும்படி இரத்தம் சிந்தப்பட்டது என்று சொல்கிறார். இந்த வசனங்களெல்லாம் பாவமன்னிப்பு, இரட்சிப்பு என்பவைகளைப் பற்றி அப் 2 : 38 மற்றும் மாற்கு 16 : 16ல் சொல்லப்பட்டுள்ளவைகளை நினைவுபடுத்துகிறது. ஆகையால், அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவதன் மூலம், நாம் கிறிஸ்துவின் இரத்தத்தை அடைந்து, பாவங்கள் போக கழுவப்படுகிறோம். இது இல்லாமல் வேறு வழியே இல்லை.

நாம் இப்பொழுது, இயேசுக் கிறிஸ்துவின் இரத்தம் சம்பந்தமாக வேறு சில காரியங்களைப் பார்ப்போம்.

1. புதிய ஏற்பாடு கிறிஸ்துவின் இரத்தத்தால் முத்திரிக்கப்பட்டுள்ளது. (மத்.26 : 28).
2. யூதர்களுக்கும், புறஜாதிகளுக்கும் இடையே பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரை கிறிஸ்துவின் இரத்தம் தகர்த்துப் போட்டது. (எபே 2 : 13, 14).
3. அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம். (ரோம 5 : 9)
4. அவருடைய இரத்தத்தின் மூலம் நமக்கு மீட்பு உண்டாயிருக்கிறது. (கொலோ 1 : 14)
5. சபையானது அவருடைய இரத்தத்தினாலே சம்பாதிக்கப்பட்டுள்ளது (அப் 20 : 28)
6. அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானம் உண்டாகிறது

(கொலோ 1 : 20)

7. கிறிஸ்துவின் விலையேறப்பட்ட இரத்தத்தினாலே பாவிகள் மீட்கப்படுகிறார்கள். (1 பேதுரு 1 : 18, 19)

8. கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கிறது (1 யோவா 1 : 7).

9. அவருடைய இரத்தம் நமது பாவங்களற நம்மைக் கழுவுகிறது. (வெளி 1 : 6)

10. ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினாலே அங்கிகள் வெளுக்கப்பட்டிருக்கிறது (வெளி 7 : 14).

11. கர்த்தருடைய பந்தியிலே பங்கு பெறும்போது அவருடைய இரத்தத்தை நினை கூறுகிறோம். (மத். 26 : 26 – 28).

இப்பொழுது, இயேசுக் கிறிஸ்துவின் இரத்தம் இதை வாசிக்கிற உங்களுடைய வாழ்க்கையில் எந்நிலையிலுள்ளது? அவருடைய இரத்தத்தோடு தொடர்பை ஏற்படுத்தும்படியாய் நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து விட்டீர்களா? உங்கள் பதில் இல்லையென்பதனால், நீங்கள் இன்னும் பாவத்தில் உள்ளீர்கள். ஆனால், நீங்கள் கர்த்தருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தால், அவருடைய இரத்தத்தோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் இரட்சிக்கப்படுவீர்கள். பிறகு, கிறிஸ்து தன் இரத்தத்தைச் சிந்தி சம்பாதித்த சபையில் சேர்க்கப்படுவீர்கள். அதன்பின், ஒரு கிறிஸ்தவனாயிருந்து, அவர் ஒளியிலிருக்கிறது போல, நாமும் ஒளியிலே நடந்து, வாரம் தவறாமல், கர்த்தருடைய பந்தியில் கலந்து கொள்வதின் மூலம் அவருடைய இரத்தத்தைத் நினைவு கூர்ந்தால், அந்த இரத்தம் உங்களை எல்லாப் பாவம் மற்றும் அநீதிகளிலிருந்து உங்களைக் கழுவி, இறுதி நாளில் கிடைக்க இருக்கும் ஈவாகிய நித்திய வாழ்வுக்கு உங்களைப் பாதுகாத்து வைக்கும்.

உண்மையாகவே, இரத்தத்திற்கு வல்லமை உண்டு.

**ஜே. சி. சோட்.** **தமிழில் : EZSR**

# 8. பிரசங்கி ஜனங்களின் கவனத்தை எப்படிக் கவர்ந்து கொள்வது?

பிரசங்கி தன் பிரசங்கத்தைக் கேட்போர் கவனத்தை கவர்ந்து கொள்ள பிரயாசம் பண்ணவேண்டும். நமது பிரசங்கம் எவ்வளவாய்ப் பேசினாலும் ஜனங்கள் கவனிக்கவில்லையானால் பலன் இல்லை. ஆங்கில இராணுவ விளம்பரங்களின் தலைப்பில் 'கவனம்' என்னும் வார்த்தையை பெரிய எழுத்தில் எழுதுவது வழக்கம். நமது பிரசங்கங்களுக்கும் இதுவே மேல் விலாசமாய் இருந்தால் நல்லது. சபையில் கூடி வந்திருக்கும் போது வாஞ்சையும், உண்மையும், விழிப்பும் உள்ள தொடர்ந்த கவனம் நமக்கு வேண்டும். ஜனங்கள் வேறு சிந்தையாயிருந்தால், அல்லது ஒன்றையும் கவனிக்காமல் ஏனோதானோவென்று இருந்தால், அவர்கள் சத்தியத்தை ஏற்றுக் கொள்வது முடியாத காரியம்.

தாங்கள் பிரசங்கிக்கிறதை ஜனங்கள் கவனிக்கிறார்களோ இல்லையோ என்று கவலைப்படாத பிரசங்கிகளும் உண்டு. குறிக்கப்பட்ட நேரம் வரை எதையாவது புலம்பிக் கொண்டு நிற்கக் கூடுமானால் அதுவே அவர்களுக்குப் போதும். அப்படிப்பட்ட பிரசங்கிகள் பிரசங்கிப்பதை விட்டு விடுதல் நல்லது. மரித்துப் போனால் நல்லது. நாம் அப்படிப்பட்ட பிரசங்கியாராயிராமல் ஜனங்களைக் குறித்து அக்கரை உள்ளவராக. கவலைப்படுகிறவராக இருக்க வேண்டும்.

சபையாருடைய கவனத்தைக் கவர்ந்து கொள்வது இலேசான காரியமல்ல. பிரசங்கத்தைக் கவனமாய்க் கேட்பது அவர்கள் கடமை என்பது நாம் அறிந்ததே. ஆனால் பிரசங்கத்தை அவர்களை கவனிக்கப் பண்ணுவதோ நமது கடமை என்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டும். மீனைத் தூண்டில் நேருக்கு வரப்பண்ணுவது மீன் பிடிப்போனின் கடமை. மீன் வரவில்லை என்றால் தனது கடமைகளில் தவறாமல் இருந்தாலும் ஆத்துமாக்கள் வரவில்லை என்றால் பிரசங்கியே குற்றவாளியாக இருக்கிறார். ஆகவே ஆத்துமாக்கள் வருவதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்ய முற்படவேண்டும். ஆத்துமாக்களை சம்பாதித்துக் கொள்ள தவறான வழிகளைத் தெரிந்து கொள்ளாமல் தொடர்ந்து சத்தியத்தையே சாந்தமாக போதித்து ஜனங்களின் கவனத்தைக் கவர்ந்து கொள்ள வேண்டும்.

சில வேளைகளில் நமது ஜனங்களின் ஒழுங்கீனமான செயல்களின் மூலமாய் கவனத்திற்கு பெரும் தடை இருக்கும். அவர்கள் ஆராதனைக்கு வருவது ஒழுங்காக இருக்கும். ஆனால் சொல்லப்படும் சத்தியத்தைக்

கவனிக்கிற விஷயத்தில் ஒழுங்கு இல்லை. சபையில் உட்கார்ந்து கொண்டு, வருகிற ஒவ்வொரு ஆளையும் திரும்பிப் பார்க்கிற வழக்கம், பிரசங்க நேரத்தில் ஒவ்வொருவராய் வந்து தரையில் சலங்கை ஒலியுடன் (ஆபரணங்களின் ஒலி) உட்காருகிற வழக்கம். சிலர் பிரசங்கிக்கிற நேரத்தில் மூக்கைச் சிந்தவும், காறித்துப்பவும் சிறுநீர் கழிக்கவும் தங்களிடங்களை விட்டு எழுந்து போகிற வழக்கம், சிறு பிள்ளைகளை ஒழுங்காய் உட்கார வைக்காமல் அவர்களின் விருப்பப்படி அங்குமிங்கும் ஓடவிடுவது. பெற்றோர்களின் வழக்கம். இவைகள் எல்லாம் கவனத்திற்கு இடையூறான பழக்கங்கள். இவைகள் தவிர்க்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் பிரசங்கி தனது பிரசங்கத்தை கவனிக்கக் கவர்ந்து கொள்ள முடியும்.

இவ்வித இடையூறுகள் ஒரு சபையிலிருந்து நீக்கப்பட்டன என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது பிரசங்கி தனது பிரசங்கத்தைக் கேட்போரின் கவனத்தை வசப்படுத்திக் கொள்வதற்கு ஏதுவாய் பிரசங்கி அனுசரிக்க வேண்டிய பொன்னான ஆலோசனைகள்.

1. கேட்கிறதற்கு ஏற்ற விசயங்களை எப்பொழுதும் சொல்ல வேண்டும்.
2. பிரசங்கிக்கிற பொருள் ஜனங்களுக்கு நன்றாய் விளங்கத்தக்கதாக ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.
3. பொருள்பட பேசுவது மிகவும் அவசியம்.
4. அனுபவசாலியாக பேசுவது ஜனங்களின் கவனத்திற்கு அனுகூலமாயிருக்கும்.
5. முகவுரை அதிகம் நீண்டு போகக் கூடாது.
6. பிரசங்கிக்கும் போது சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லக்கூடாது.
7. பிரசங்கம் குறிப்பிட்ட நேரத்திற்குமேல் நீண்டு போகாதிருக்க வேண்டும்.
8. பிரசங்கி தானே தான் சொல்லும் விசயத்தைக் குறித்து பரிச்சயமுள்ளவனாய் இருக்கவேண்டும்.
9. பிரசங்கத்தில் தகுதியான உதாரணங்களை உபயோகிக்க வேண்டும்.
10. முப்பது நிமிடத்திற்குமேல் பிரசங்கம் நீண்டுவிடுமாகில் சிறிது நேரம் பிரசங்கத்தை நிறுத்திவிட்டு பாடலின் பல்லவியை பாடலாம்.

ஜனங்களின் கவனத்தைக் கவர்ந்து கொள்வதற்கு இந்த தங்க சூத்திரத்தை நாம் கடைபிடிப்போமாகில் நிச்சயம் ஜனங்கள் பிரசங்கம் முழுவதுமாக கவனித்து பிரசங்கத்தில் நிலையாய் இருக்கும்படியாகச் செய்வோம்.

கே. பாஸ்கர், அருவங்காடு

# வெற்றி

பொதுவாக அநேக புத்தகக் கடைகளில், "வெற்றிக்கான வழிகள்" என்ற புத்தகங்கள் அமோகமாக விற்பனையாகிறதை பார்க்கிறோம். சுய தேவையினை நிறைவு செய்கின்ற காரியத்தில், இந்த "வெற்றிக்கான வழி" என்ற புத்தகங்கள் விற்பனையில் சாதனைப் படைக்கிறது. இவைகளில் சில நல்ல புத்தகங்கள் நல்ல புத்தகங்களாக இல்லை. இந்த புத்தகங்கள் யாவும் நம்மை மாம்ச ரீதியாகத்தான் உயர்த்தும். மாம்சத்தின், காரியங்கள் யாவும் அழியக் கூடியவைகள். இந்த வழிகள், பரிசுத்த வேதாகமத்தோடு வேறுபட்டிருக்கிறது. தேவனுடைய தலைமையாளர்கள், உலக கோட்பாடுகள் தத்துவங்கள் யாவையும் விட்டு விட்டு தேவனுடைய பாதைகளை காணும்படி தங்களை ஒப்புக் கொடுக்கின்றவர்களாயிருக்க வேண்டும்.

கிறிஸ்தவ தலைமையாளர்கள், வெற்றிக்காக மிகவும் ஆர்வமுள்ளவர்களாக இருக்க வேண்டும். வெப்ஸ்டர் என்பவர் சொல்லும் விளக்கம், "வெற்றி என்பது மனதுக்கு சந்தோஷத்தைக் கொடுப்பதும், மனநிறைவையளிக்க கூடிய ஒரு விளைவு" ஆகும். வெற்றி முன் தீர்மானிக்கப்பட்ட இலக்கையடைவது. வெற்றி என்பது ஒரு நல்ல தலைமையாளரின் பிரயாசத்தின் பலனாகும். ஆனால் இந்த முயற்சிக்கு தேவனால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளும், சில வழிமுறைகளுமுண்டு. அவைகள் எளிதில் எல்லோராலும் தள்ளப்பட்டுவிடுகிறது. மாறாக "வெற்றி" ஏதாவது ஒரு வழியில்" என்ற கொள்கை எல்லோராலும் கடைப்பிடிக்கப்படுகிறது. தேவனால் அங்கீகரிக்கப்படும் வழிமுறைகளால் வரும் வெற்றி - ஒரு சந்தர்ப்பவாதமல்ல, அதிர்ஷ்டம் அல்லது ஒரு விபத்தல். அது அநேக மணி நேரங்கள் ஜெபத்திலும் வேதத்தைக் கற்றுக் கொள்ளுதலிலும் - திட்டமிட்டு கடினமாக உழைப்பதிலும்தான் கிடைக்கும். ஒரு கிறிஸ்தவ தலைமையாளரே எல்லா தலைமையாளர்களை விட மேலானவர் என்பதை புரிந்து கொண்டு தங்களை அர்ப்பணித்து மற்றவர்களையும் வெற்றியின் பாதையில் அழைத்துச் சென்றால் அந்த பிராந்திய சபை வெற்றிக்கு சான்றாக நிலை நிற்கும்.

அநேக மக்களுக்கு, ஒரு நல்ல மதிப்புள்ள வெற்றிக்கான வழிகளை வேதாகமம் அளிக்கிறது என்பது மிகவும் வியப்பூட்டக்கூடியதாக

இருக்கிறது. இந்த வெற்றி என்பது சபைக்கும் வெளியே தான் சாத்தியப்படும் என்றும் நினைப்பது தவறு. வேதாகமத்தின் துவக்க முதல் முடிவு வரை வெற்றிக்கான அநேக சான்றுகளை நாம் பார்க்கிறோம். அதே சமயத்தில் தோல்விகளைப் பற்றிய முன்னுதாரணங்களும் குறிக்கப்பட்டுள்ளது. சிருஷ்டிப்பின் பகுதியில் நாம் வாசிக்கிறோம். "இது நல்லது" என்று சொல்லப்பட்டிருக்கிறது. சிருஷ்டிப்புகளுக்கெல்லாம் முடி சூட்டப்படும்படி, தேவன் மனிதனை "தமது சாயலாக சிருஷ்டித்தார்" (ஆதி 1 : 26, 27) இதிலிருந்து தெரிந்து கொள்ளுங்கள். தேவன் மனிதனை தோல்விக்காக சிருஷ்டிக்கவில்லை. ஆனால் மனிதன் எப்பொழுது தோல்வியை சந்தித்தான் என்றால், எப்பொழுதெல்லாம் தேவனுடைய விருப்பத்திற்கு மாறாக தெரிவு செய்தானோ அப்பொழுதெல்லாம் அவனுக்கு தோல்வி ஏற்பட்டது இன்றும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. தேவனுடைய சாயல் என்பது மனிதனுடைய தோல்வியின் சாயல் அல்ல.

வெற்றி என்பது அநேக பரிசுத்த வேதாகம பாத்திரங்களில் (Characters) முன்னுதாரணங்களாக காணப்படுகிறது. ஒரு சந்தர்ப்பத்தில் தேவன், யோசுவாவை நோக்கி சொன்னார், 'அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப் பண்ணுவாய்" (யோசு 1 : 8). இயேசு கிறிஸ்து வெற்றிக்கு மற்றொரு சாட்சி. இரட்சகர் இந்த பூமிக்கு தேவனுடைய சித்தத்தை செய்து முடிக்கும் உன்னத பணியோடு வந்தார். அவருடைய மரணத்துக்கு முன்பாக... அவர் சொன்னது, "எல்லாம் முடிந்தது" (யோவான் 19:30). இப்படியாக பிதாவின் சித்தத்தை வெற்றிகரமாக செய்து முடித்தார். கிறிஸ்து ஆரம்ப கால சீஷர்களுக்கு ஒரு வெற்றியின் சின்னமாக விளங்கி அவர்களுக்கு ஒரு கட்டளை கொடுத்தார். உலகமெங்கிலுமுள்ள சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் பணியை கொடுத்தார். (மாற்கு 16 : 15, 16, மத் 28 : 18, 20). அவர்கள் தோல்வியடைந்தார்களா? இல்லை கொலோ 1 : 23ல் நாம் பார்க்கிறோம் இந்த பணியில் ஆரம்ப கால சபை வெற்றியின் இலக்கையடைந்துவிட்டது. முதல் நூற்றாண்டு சபை, தேவன் விரும்பியபடியான வெற்றியின் சபையாக விளங்குகிறது. அதே வரைமுறைகள் இன்றைக்கு நமக்கும் பொருந்தும். கேள்வி நாம் வெற்றி வாகை சூட முடியுமா? தலைமையாளர் கொடுக்க வேண்டிய பதில், ஆம்!!

மற்றொரு வெற்றிக்கான குறிப்பிடத்தக்க உதாரணம். அப்போஸ்தலனாகிய பவுல் அநேகருடைய கருத்து, அப் – பவுல் எல்லா காலங்களிலும் ஒரு தலை சிறந்த வெற்றியாளர். பவுல், கிறிஸ்துவின் பணியிலும் யூதமார்க்கத்திலும் வெற்றிகளை சம்பாதித்த ஒரு வெற்றி வீரர். (கலா 1 : 11 – 17). அவருடைய மனமாற்றத்திற்குப் பிறகும் அவர் தோல்வியை சந்திக்கவில்லை.

மேலும் மேலும் பல வெற்றிகளை அடைந்தார். அவர். ஜீவியம் எப்பொழுதும் வெற்றியை மையமாகக் கொண்டே அமைந்திருந்தது. மூன்று சுவிசேஷ பயணங்கள் சென்றுள்ளார். பதின்மூன்று நிருபங்களை எழுதியிருக்கின்றார். அநேக பிராந்திய சபைகளை ஏற்படுத்தியிருக்கிறார். அவருடைய ஜீவியமும், எழுத்துக்களும் வெற்றிக்கான அடிப்படை கருத்துக்களை ஏராளமாக கொண்டிருக்கிறது. அவைகளை நாம் கற்றுக் கொள்வோமானால், நாம் வெற்றி பாதையில் வீறு நடை போடமுடியும். சந்தேகமில்லை

பவுலினுடைய, வெற்றிக்கான வழிகளை (பிலி. 3 : 12–14)ல் நாம் காணலாம். “நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக் கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன் . . . கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்”. இப்படியாக கீழ்க்கண்ட சில வேத வசனங்கள் ஒரு நல்ல துடிப்புமிக்க வெற்றி வீரராக நம்மை மாற்ற பெரிதும் உதவும். ஆண்டவருடைய அருட்பணிக்கு அப்படிப்பட்டவர்கள் மிகவும் தேவை.

முதலாவதாக, பவுல் சொல்லுகிறார், இந்த வெற்றி உடனடியாக நம்மை வந்து சேராது. மாறாக தொடர் பிரயாசத்தினால் தான் கூடும். “நான் அடைந்தாயிற்று . . . என்று எண்ணாமல் இந்த வார்த்தையை சொல்ல, ஒரு நல்ல உள்ளுணர்வு தேவை ,அர்பணிப்பும், பணிவும் தேவை. சபையாகிய மணவாட்டிக்கு எப்பொழுதும் சவால்களை சந்திக்க வேண்டியது இருக்கிறது. சகல, சிருஷ்டிகளுக்கும் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் கடமையுண்டு. அதை சபை சோர்ந்து போய், விட்டு விடுதல் கூடாது. காரணம் இந்த பணி ஒரு கடினமான முயற்சிதான். வெற்றிக்கு உழைப்பு தேவை, ஆண்டவர் மீண்டும் வரும்வரை சுவிசேஷ பணியை சபை செய்ய வேண்டும்.

இரண்டாவதாக பவுல் ஒரு இலக்கை வைத்து அந்த இலக்கை நோக்கி தொடருகிறார். “ஒன்று மட்டும் செய்கிறேன். பவுலுக்கு நிச்சயமாகத் தெரியும். அவர் எங்கே போகப் போகிறார். அந்த இடத்துக்கு எப்படி போய் சேரப் போகிறார் என்று. அந்த இலக்கை நோக்கி முதலாவது தம்முடைய இருதயத்தை வைத்த பவுல் தொடர்ந்து அதில் அர்ப்பணிப்போடு பிராயசப்படுகிறார்.

மூன்றாவதாக, கடந்தவைகளைக் குறித்து கலங்காமல் (or) அதையே எண்ணிக் கொண்டிராமல் ஒருவேளை அது வெற்றியாக

இருந்தாலும் தோல்வியாக இருந்தாலும், அவைகளை பின்னாக விட்டுவிட வேண்டும், ஒரு நல்ல தலைமையாளருக்குத் தெரியும் கடந்த கால தோல்விகளில் நிலை கொண்டிருப்பது என்பது ஒரு பெரிய அழிவுக்குத்தான் காரணமாகுமென்று. அதைப் போலவே கடந்த கால வெற்றிகள் இன்றைக்கும் நமக்கு கிடைக்குமா? இன்றைக்கு நமக்கு ஒரு புதிய சவால் உண்டு.

நான்காவதாக, பவுலுக்கு எப்பொழுதுமே தமக்கு முன் இருக்கும் சவால்களையும் போராட்டங்களையும் சந்திப்பதில் ஆர்வம் மிகுதியாக இருந்தது. "தனக்கு முன்பாக இருப்பவைகளை நோக்கி அவருடைய எதிர்காலத்தைப் பற்றி ஒரு ஆவல் எப்பொழுதும் காணப்பட்டது. ஒவ்வொரு தலைமையாளரும் நாள்தோறும் சவால்களை விரும்ப வேண்டும் வாய்ப்புகளை பயனுள்ளதாகக் மாற்றிக் கொள்ள வேண்டும். அவைகளால் வெற்றிக்கான வழிகள் உண்டாகும்.

ஐந்தாவதாக, ஒரு வல்லமையான தேவனுடைய மனுஷனான பவுல் எப்பொழுதும் தன்னுடைய ஆர்வத்தை விட்டு விடவேயில்லை அவர் சொல்லுகிறார். "நான் தொடருகிறேன்" ஒரு தலைமையாளராக, அவர் தொடர்ந்து பணியாற்ற விரும்புகிறார். இலக்கையடையும் வரை பணியாற்ற விரும்புகிறார். இது ஒவ்வொருவருடைய தனிப்பட்ட தீர்மானங்களும், நல்லொழுக்கங்களும் வெற்றி பாதையில் நம்மை வெற்றியுடன் நடத்திச் செல்லும்.

ஆறாவதாக, அப்போஸ்தலனாகிய பவுல் எப்பொழுதுமே தேவனுடைய உதவியில் சந்தேகப்படவேயில்லை. அவர் சொல்லுகிறார். "பந்தயப் பொருள்" எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. அவர், தான் நிச்சயமாக வெற்றி பெறுவேன் (பந்தயப் பொருளைப் பெற்றுக் கொள்வேன்) என்பதில் சரியான சிந்தையுள்ளவராக இருந்தார். இன்னும் ஓட்டத்தை தொடர்ந்து ஓடுவதாக சொல்லும் அவர் தேவன் மீதான நம்பிக்கையினால் தான் வெற்றி பெறுவேன் என்று உறுதியாக சொல்லுகிறார். இன்றைய தலைமையாளருக்கு இது தேவை.

ஏழாவதாக, பவுல் தனக்கு முன் மகத்தான பணியும், பல விருப்பங்களும் வைக்கப்பட்டிருந்தாலும் தன்னுடைய விசேஷித்த அழைப்பைக் குறித்தும், அழைப்பின் நோக்கத்தைப் பற்றியும் அதன் முதன்மை தன்மையைக் குறித்தும் அவர் ஏனோ தானோவென்று இருக்கவில்லை. "பரம அழைப்பின் பந்தயப் பொருள்" என்று சொல்லுகிறார். இயேசு சொன்னார், "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் ... (மத். 6 : 33). இதுவே,

தலைமையாளரின் முக்கியமான திறவு கோலாகும். தொடர்ந்து ரோமர் 8:31ல் பாருங்கள். தேவன் நம் பட்சத்தில் இருந்தால் நமக்கு விரோதமாக இருப்பவன் யார். அவருக்குத் தெரியும் தேவனுடைய வல்லமையும் வழிகளும் அவருடன் கூட இருக்கிறது. "என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய பெலனுண்டு" (பிலி 4 : 13) என்றும் அவர் எழுதுகிறார். தேவனால் கூடும் . . . நம்மில் கிரியை செய்யும் தேவ பெலனால் (எபேசி 3 : 20). பவுலுடைய வாழ்க்கையின் வெற்றியான கீழ்க்கண்ட பத்து காரியங்களை உள்ளடக்கியுள்ளது.

1. தெளிவான தொடர் உழைப்பு –
2. இலக்கை நிர்ணயித்து – உன் கண்களை அதன் மேல் வை
3. கடந்தவைகளில் நிலை கொள்ளாதே.
4. சவால்களையும் வாய்ப்புகளைக் குறித்தும் ஆர்வமுள்ளவனாயிரு!
5. உன்னுடைய ஆவலை விட்டுவிடாதே.
6. உன்னுடைய திட்டங்களிலிருந்து தேவனை தள்ளி விடாதே!
7. உன்னுடைய முதன்மையானவைகளை ஒழுங்குபடுத்து.
8. எப்பொழுதும் நேர்மறை சிந்தனையாளராக இரு. (நீதி 23 : 7)
9. உன்னில் நம்பிக்கை வை. (கிறிஸ்து உனக்கு உதவுவார்)
10. நாம் நினைப்பதற்கும் கேட்பதற்கும் மேலாக தேவனால் எல்லாம் கூடும் மறந்து விடாதே!!

ஒரு வேளை தலைமையாளரோ அல்லது பணியாளரோ சபையாளரோ, சமுதாயமோ, பள்ளியோ, வீடோ இவைகளை கைக் கொண்டால், வெற்றி நிச்சயம். பவுல் நமக்கு ஒரு சிறந்த முன்னுதாரணம் பரிசுத்த வேதாகமத்தை எடுங்கள். மேலும் அநேக சான்றுகளை கண்டு பிடியுங்கள். வாழ்க்கையில் அவைகளை பயனுள்ளதாக்குங்கள்.

நாம் தோல்விக்கானவர்களல்ல வெற்றிக்கானவர்களே?

"TRUTH CAN AFFORD DEFEAT SOME TIMES
WHERE AS LIE CANNOT"

"சத்தியம் சில வேளைகளில் தோல்வியடைந்தது போல காணப்படும் ஆனால் பொய் என்றைக்கும் வெற்றி பெறாது".

**J.J. TURNER.**

**வே. தானியேல் துரைராஜ்,**
**திருச்சி**

# வேதாகமத் திருமுழுக்கு

திருமுழுக்கைப் பற்றிய உண்மையைக் கூறும் ஒரே புத்தகம் வேதாகமம் மட்டுமே எனவே, இந்தக் காரியத்தைப் பற்றிய உண்மையை அறிய, நாம் தேவனின் ஏவப்பட்ட (வசனத்திற்கு) வார்த்தைக்குச் செல்ல வேண்டும். கீழ்க்கண்ட உண்மைகளைக் கவனியுங்கள் :

1. ஒரே திருமுழுக்கு மட்டுமே உண்டு. (எபேசியர் 4 : 5). இந்த உண்மை கி.பி. 64ம் ஆண்டு எழுதப்பட்டது. வேறு திருமுழுக்குகள் இருந்தன; ஆனால் அந்தக் காலத்தின் போது ஒரே ஒரு திருமுழுக்கு மட்டுமே இருந்தது.
2. அது ஒரு அடக்கம். (கொலோ. 2 : 12, ரோமர் 6 : 3, 4). "பாப்டிஸ்மோ" என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வந்த திருமுழுக்குக்கு எப்போதுமே "அடக்கம்" அல்லது "முழுக்குதல்" என்று தான் பொருளே தவிர, ஒரு போதும் தெளித்தால் அல்லது ஊற்றுதல் எந்த பொருள் அதற்குக் கிடையாது.
3. அது தண்ணீரில் செய்யப்படும் ஒரு அடக்கம். (அப். 8 : 26 – 39).
4. அது கிறிஸ்துவின் நற்செய்தியின் ஒரு கட்டளை (மாற்கு 16 : 15, 16), அப். 10 : 48).
5. பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகியவர்களின் பெயரால் அது செய்யப்பட வேண்டும். (மத். 18 : 18, 20).
6. அது இரட்சிக்கிறது. (1 பேதுரு 3 : 21).
7. அது பாவங்களின் மன்னிப்புக்கென்று ஏற்படுத்தப்பட்டது. (அப். 2 : 38).
8. அது பாவங்களைக் கழுவுகிறது. (அப். 22 : 16).
9. அது ஒருவனை கிறிஸ்துவுக்குள் கொண்டு வருகிறது. (ரோமர் 6 : 3,4; கலா. 3 : 26, 27).
10. அது ஒருவனை சபைக்குள் கொண்டு வருகிறது. (1 கொரி. 12 : 13).

குறிப்பு : திருமுழுக்கு மட்டுமே ஒரு மனிதனை இரட்சிப்பதில்லை. ஒருவன் கர்த்தரை விசுவாசிக்கப் போதுமான நம்பிக்கையுள்ளவனாக இருந்து, (எபி. 11 : 6) அவனுடைய பாவங்களுக்கு மனஸ்தாபப்பட்டு (அப். 17 : 30), கிறிஸ்துவை அறிக்கை செய்து (மத். 10 : 32), கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து திருமுழுக்குப் பெற்றுக் கொள்ளும் போது மட்டுமே (அப். 10 : 48; எபி. 5 : 8, 9) திருமுழுக்கு அவனை இரட்சிக்கிறது.

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8.45 P.M. - 9.00 P.M., Thursdays, 9.00 - 9.15 P.M Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, and Thursdays, 2.00 P.M. -2.15 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Speaker, P.R.Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM** : Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K.Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/O PP/5
Posted at Erode HPO on 20. ஆகஸ்ட்-1997
ஆகஸ்ட்-THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## -: அஞ்சல் வழி வேதாகமக் கல்வி :-

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, "அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியை" ஆரம்பிக்க கர்த்தர் கிருபை புரிந்துள்ளார்.

இது, 15பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ் " வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ.எண். 27
காங்கயம் - 638 701.

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

PRINTED MATTER BOOK-POS

If undelivored Please return to
The Editor Phone (04257) 20030
THIRUMARAI AASAAN
Post Box No 27, KANGAYAM - 638 701